24.3.25 Page. No. 3 தினமணி

# அவினாசிலிங்கம் கல்வி நிறுவனத்தில் நன்றி நவிலும் விழா



மாணவிக்குப் பரிசு வழங்கிய வேந்தர் தி.ச.க.மீனாட்சிசுந்தரம். உடன், துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் உள்ளிட்டோர்.

கோவை, மார்ச் 23: அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தில் நன்றி நவிலும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு உயர்கல்வி நிறுவனத்தின் வேந்தர் தி.ச.க.மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் 2024 - 25 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் ஆய்வறிக்கையை வாசித்தார். பேராசிரியர் வாசுகிராஜா வரவேற்றார்.

கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கலா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகள், தொழில்நுட்பக் கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, உடற்பயிற்சிக் கல்வி ஆகிய பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில், பேராசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர்.